நாள் 09.08.2021.
அ வ எண் 3/2008
பி வா சா 1 சுல்தான் அசன் ஷெரிப்
சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

நான் இந்த வழக்கில் 2ம் பிரதிவாதி ஆவேன். 1ம் பிரதிவாதி முகம்மது உசேன் என்றால் சரிதான். இந்த வழக்கிற்கு எதிர் உரை தாக்கல் செய்வதற்கு வழக்கறிஞரிடம் நான்தான் விவரம் கூறினேன் என்றால் சரிதான். வழக்கு சொத்து 1ம் பிரதிவாதிக்கு பாத்திப்பட்டதா என்றால் அனுபவ உரிமை உள்ளது. வழக்கு 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றுதான் நான் கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். 1, 2 வாதிகள் 3ம் பிரதிவாதியான திருக்குறுங்குடி ஜீயர் மடத்திடமிருந்து அடவோலை பெற்றுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தை பொறுத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டுள்ளதா என்பதை பற்றிய ஆவணம் எதையும் நான் பார்த்ததுள்ளேனா என்றால்,இல்லை. 3ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை வாதிகள் பாத்தியம் கோருவது குறித்து நான் கேட்டுள்ளேனா என்றால் இல்லை. தபசில் சொத்தின் சர்வே எண் 7/3 அதன் மொத்த விஸ்தீரணம் எனக்கு தெரியாது. வழக்கு சொத்து கெங்கா சாமி என்பவருக்கு பாத்தியப்பட்டது குறித்து எனக்கு எதுவும் தெரியுமா என்றால் , வழக்கு சொத்து மடத்திற்கு பாத்தியப்பட்டது. வேறு எதுவும் தெரியாது. 1987 ம் வருடத்திற்கு முன்பாக ஜீயர் மடத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் பொறுத்து கிரைய ஆவணங்கள் பதிவு செய்யப்படலாம் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் ஏர்வாடியில் குடியிருந்து வருகிறேன். ஏர்வாடி முழுவதும் திரு ஜீயர் மடத்திற்கு பாத்தியப்பட்ட நிலங்கள் உள்ளது என்றால் சரியல்ல. குறிப்பிட்ட பகுதிகளே உள்ளது. வழக்கு சொத்து திருவரங்கனேரி கிராமத்திற்கு பாத்தியப்பட்டதாகும். திருவரங்கனேரி கிராமம் என்பது ஏர்வாடியின் வடக்கு பகுதியை முழுமையாக கட்டுப்படுத்தும் என்றால், சரியல்ல. வாதிகள் 05.07.2002ல் மடத்திடமிருந்து தலா 3 சென்ட் நிலம் கிரையம் பெற்ற விவரம் எனக்கு எப்போது தெரியும் என்றால், வழக்கு தாக்கல் செய்த பிறகுதான் தெரியும். வாதிகள் வழக்கு சர்வே எண் 7/3ல் முழுமையாக கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால், எனக்கு தெரியாது. வழக்கு பிராதில் வழக்கு சொத்தின் எல்கை விவரம் சொல்லப்பட்டுள்ள விவரம்

தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு 1ம் பிரதிவாதிக்கு தபசில் சொத்தில் எத்தனை சென்ட் பாத்தியம் என்றால், தெரியாது. 1ம் பிரதிவாதியின் மூல ஆவணம் பாத்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அந்த மூல ஆவணத்தில் 1ம் பிரதிவாதிக்கு எவ்வளவு சென்ட் பாத்தியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரியாக ஞாபகம் இல்லை. 1ம் பிரதிவாதி சான்றிட்ட நகல் எடுத்துக்கொடுத்தாரா என்றால், இல்லை. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் நானாகவே சான்றிட்ட நகல் எடுத்துக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 ஆவணம் 1ம் பிரதிவாதி எடுத்த சான்றிட்ட ஆவணம் ஆகும். பி.வா.ஆ.1 ஆவணம் எந்த தேதியிட்டது என எனக்கு தெரியாது. அதில் உள்ள விஸ்தீரணம் எல்கைமால் விவரம் தெரியுமா என்றால், சரியாக ஞாபகம் இல்லை. பி.வா.சா.ஆ.1 ஆவணம் யாருடைய பெயருக்கு யார் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால், சரியாக ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது என்றால், படித்து பார்த்துவிட்டு சரியாக சரியாக ஞாபகம் இல்லை என்று கூறுகிறாா். பி.வா.சா.ஆ.2 ஆவணத்தை பற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.2 ஆவணம் யார் யாருக்கு எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதியின் வீட்டிற்கு தென்பக்கம் தென்வடல் ரோடு செல்கிறது என்றால் சரிதான். வழக்கு சொத்தின் வடக்கு பகுதியில் கிழமேலாக ரோடு செல்கிறது என்றால் சரிதான். தெற்கு பகுதியில் தெரு உள்ளது என்றால் சரிதான். அதன் பெயர் ரஹ்மத் தெரு ஆகும். வழக்கு சொத்தின் மேற்கு பக்கம் எல்கையில் 1ம் பிரதிவாதியின் மனை உள்ளது. கிழக்கு பகுதியில் ரோட்டிற்கு அருகில் 1ம் பிரதிவாதியின் வீடு உள்ளது என்றால் சரிதான். எனது இடத்திற்கு மேற்கு பக்கம் காலிமனை உள்ளது அதற்கு மேற்கில் மல்காம்மாள் வீடு உள்ளது என்றால், சொல்லி கேள்விப்பட்டுள்ளேன். அந்த வீடு கட்டி எவ்வளவு ஆண்டுகள் இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. தென்வடல் ரோட்டிற்கும் மல்காம்மாள் வீட்டிற்கும் இடையே கிழமேல' எத்தனை அடி இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. தெற்கு பக்கம் உள்ள தெருவில் இருந்து வடக்கு பக்கம் உள்ள தெரு வரை எவ்வளவு அடி இருக்கும் என்றால் சுமார் 60 அடி இருக்கும். 1ம் பிரதிவாதி வீட்டை சுற்றி காம்பவுண்ட் உள்ளது என்றால் சரிதான். காம்பவுண்ட் சுவர் கட்டப்பட்டு

எவ்வளவு நாட்கள் இருக்கும் என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதியிடமிருந்து நபிஷா என்பவர் எப்போது கிரையம் பெற்றார் என்றால் 2002ம் வருடம் கிரையம் பெற்றார். நபிஷா என்பவரின் கணவர் பெயர் ஹனிபா என்றால் சரிதான்.